1972 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவு மாணவர்கள் இருப்பார்களானால் தனியாகவே ஒரு ஆசிரியரைப் போடலாம் என்பதாக அரசு உத்தரவிட்டிருக்கிறது. தெலுங்கு ஆசிரியருக்கு நிர்ணயித்துள்ள சம்பளத்தை அதிகப் படுத்தவேண்டும் என்பதற்கும் பள்ளி கல்வி இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார். விரைவில் அதற்கான அனுமதியும் அளிக்கப்படும். இதற்குள் தெலுங்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருப்பார் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

பள்ளி மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை

***43 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக்கூட மாணவர்களுக்கு கட்டாய வைத்திய பரிசோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தற்பொழுது எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் கட்டாய வைத்தியப் பரி சோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை. அவ்வாறு கட்டாயமாகச் செய்ய இயலாவிடினும், எந்த வகையில் செய்யமுடியும் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளாவது இந்த மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்களா ? சிறு வயதிலேயே வியாதி இன்னதென்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அந்தக் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படாதவாறு தடுத்துவிட முடியும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்கள் 5 வயது முதல் 10 வயதிற்குள் இருப்பவர்கள் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் இப்போது 12 ப்ளாக்குகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மூலம் செயல்படுகிறது. மேலும் 6 ப்ளாக்குகளுக்கு விரிவுபடுத்த மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைக் கேட்டிருக்கிறோம். அது தவிர சென்னை நகரத்தில் எல்லா மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவது என்று யோசிக்கிறபோது மிகப் பெரிய செலவுடைய திட்டமாக இது அமைகிற காரணத்தினால் சிறிது யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் ஐயாயிரம் மாணவர்களுக்கு ஒரு பைலட் திட்டத்தை சென்னை நகரத்தில் 'a pilot project for 5,000 school children' என்பதாக செயல்படுத்த இருக்கிறோம். ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் அத்தனை பேர்களையும் வைத்தியப் பரிசோதனைக்கு

உள்ளாக்குகிறபோது—பத்து லட்சம் மாணவர்களுக்காவது தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டியதாக இருக்கும். இதற்கு பல கோடி ரூபாய் தேவைப்படுகிற காரணத்தினுல் இந்தத் துறையினர் இதற்கு என்ன செய்வது என்பதாக ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இது அமலுக்கு வந்தால் ஒரு சிறப்பான திட்டமாக அமையும். இப்பொழுது பைலட் ஸ்கீமாகத்தான் போடமுடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். சென்னை கார்ப்பரேஷனிலும், மதுரை கார்ப்ப ரேஷனிலும் மட்டுமாவது இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே அமல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை மாநகரத்திலே தொடங்குகிற இத்திட்டம் ஏறத்தாழ பெரிய அளவிலே நடத்தப் பட வேண்டுமானுல் 50, 60 லட்சம் ரூபாய் வரையில் தேவைப் படுகின்றது. தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தவேண்டுமானுல் என்ன ஆகும் என்று ஆய்ந்த பொழுது 3 கோடி ரூபாய் அல்லது 4 கோடி ரூபாய் வரை தேவைப்படும் என்று தெரிகிறது. பிள்ளை களைப் பெற்றெடுத்த பெற்ருேர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற முறையிலேதான் அரசாங்கம் இதில் ஈடுபடுகிறது. இந்த வகை யிலேயினும் ஒரு வகையில் இதற்காக ஏற்படுகின்ற செலவை ஏற்றுக்கொள்வதற்காகப் பெற்ருேர்கள் முன்வருவார்களானுல் அரசாங்கம் இதைச் செய்துதருவதற்கு உதவியாக இருக்கும். இலவசம், இலவசம் என்ற சொல் இப்பொழுது அதிகச் செல்வாக்குப் பெற்றுவிட்ட காரணத்தினுல் பெற்ருேர்கள் பொது வாகவே அரசாங்கம் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கருதுகிருர்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒப்புக்கொண்டால்—சமுதாயத்திலே ஒரு பிள்ளைக்காக இத் திட்டத்திற்காக ஆகும் செலவை ஒவ்வொரு குடும்பமும் ஆண்டுக்கு இவ்வளவு ரூபாய் என்ற அளவிலே வழங்கவேண்டும், அப்படிச் செய்தால் அரசாங்கம் மிச்சத் தொகையைப் போட்டு இந்தத் திட்டம் சிறப்பான முறையிலே நிறைவேற்றப்பட ஏற்பாடு செய்யலாம்—இதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஆதரவை நான் பெரும்பாலும் எதிர்பார்க்கிறேன்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பண வசதியுள்ள நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட நகராட்சி மன்றங்களிலாவது தனியாக மருத்துவர் நியமித்து நோய்களைக் கண்டுபிடித்து சிகிச்சை தரக்கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகராட்சி மன்றங்களுடைய நிதி வசதிகளுக்கேற்ப அவர்கள் தாராளமாகச் செய்யலாம். ஆனுல் நகராட்சி மன்றங்கள் இந்தத் திட்டங்களில் பணத்தை ஒதுக்கீடு செய்ய முன்வருவதில்லை. ஆஸ்பத்திரிகளை அரசாங்கமே

1972 சனவரி 25]

எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பதை முறையாகக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் நாற்பதாயிரம் ரூபாய் செலவில் இரண்டு நகரங்களில்—திருச்சி, கோயம்புத்தூர்—ஒவ்வொரு மருத்துவ யூனிட் ஏற்படுத்தி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டுமென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறது.

Mosquito menace in Madras

*44 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the steps taken by the Government to arrest the increasing menace of mosquitoes in Madras City?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மலேரியா கொசு ஒழிப்புத் திட்டம் என்பது சென்னை நகரத்திலே முறையாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. கொசு ஒழிப்புக்கான முன்னேற்பாடுகள் Aromax emulsion is used as an effective larvicide என்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது. வாராவாரம் கொசுத் தொல்லைகளை ஒழிப்பதற்காக மருந்துகள் குட்டைகளிலும் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களிலும் தெளிக்கப்படுகிறது. மழைகாலங்களில் தண்ணீர் (Storm-water drains) மருந்துகள்தேங்கியுள்ள இடங்களிலே தெளிக்கப்படுகின்றது. கொசு உற்பத்தி தடுக்கப்படுவதற்கு National Malaria Control Unit என்ற திட்டம் சென்னை நகரத்தில் தொடங்கப்படுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், சட்டசபை விடுதியிலே இந்தக் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டசபை விடுதி இருக்கிற இடமும் மொத்தமாக சென்னை நகரத்தினுடைய பகுதியாகும், கொசுவைப் பொறுத்தவரையிலும். வேண்டுமானால் மற்ற வகைகளில் தனிப் பராமரிப்பு இருக்கும். கூவம் திட்டம் மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமானால் கொசு ஒழிப்புத் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறோம். 12.84 லட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் தீவிர மாக்கப்படவேண்டுமென்று மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செலவில் ஒரு பங்கை மத்திய அரசு ஒப்புக்கொண்டால் தமிழக அரசு நிறைவேற்ற ஒப்புக்கொள்ளும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கொசு ஒழிப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் கொசுத் தொல்லைகள் அதிகரித்துக் கொண்டிருக் கின்றன என்றுதான் செய்திகள் வருகின்றன. எனவே வேறு சில நாடுகளிலே இருப்பதைப் போன்று பொதுமக்களின்